புராணங்களைக் காக்க கிளம்பிய புதிய பாரதி

அரவிந்த சக்தி புராண உண்மைகளை அறியவைத்ததோ

(o)

பசுத்தோலை அகற்றுகின்றார் பரமயோகி

(o)

திராவிட இயக்கத்தை ஒழிக்கக் கதறுவானேன்?—தவஞ்செய்யலாமே!

சென்னை, டிச. 29—

திராவிட இயக்கம் நாட்டிலே மக்களிடை வலுப் பெறுவதைக் கண்டஞ்சும் காங்கிரஸ் அடக்கு முறையின் எல்லா வகைகளையும் கையாண்டு பார்த்தும் திராவிடர் இயக்கத்தை அழிக்க முடியாதென்பதை அறிந்து கொண்டது.

எனவே, திராவிடர்களை மக்கள் முன்னிலையில் பழித்துக் கூறிப் பிரசாரம் செய்து, மக்கள் மனத்தை மாற்றியமைக்க காங்கிரஸ் புதிய புதிய கருவிகளைக் கையாண்டு பார்க்கிறது.

இத்தகைய கருவிகளுட் பல திருப்பிடித்துப் போனவை என்பதை அறிந்துகொண்ட காங்கிரஸ் அரவிந்த ஆசிரமப்பயிற்சிபெற்று ஆசிரம வேலையற்றுப் போன தமிழ்ப்போர்வையில் இருக்கும் ஒரு புதிய யோகி பாரதியாரைக் கருவியாக்கியிருக்கிறது. கதிரவனை மறைக்க இந்தச் சளைக் காங்கிரஸ் பயன்படுத்த முயல்கிறது, தப்பித்துக்கொள்ள முயலும் குற்றவாளி எக் கருவியையும் பயன்படுத்துவதுபோல.

பாவம் பாரதி; முன்னர் இந்தி எதிர்ப்புப் போர்க் காலத்தில், இந்தி எதிர்ப்பாளரிடம் இந்தி அடியோடு கட்டாயமாகக் கூடாதென்று கூறி, பின் ஆதரவாளர் சென்று கண்டபோது, இந்தி கட்டாய மொழியாக்கப்பட வேண்டும் என்று கூறிய அத்துணை நெஞ்சுரமும் ஆராய்ந்து முடிவு கூறும் திண்மையும் வாய்க்கப் பெற்ற தோழர் இந்தத் தோழர் சுப்பிரமணிய ஐயர்-இப்போது பாரதி; திராவிடர்களை எதிர்க்கும் திருப்பணியில் இறங்கியிருக்கிறார்—புராணங்களைக்காக்கக் கங்கணங் கட்டிக் கொண்டு.

தோழர் சுத்தானந்த பாரதியின் ஆசையை, புராணங்களைப் போற்றும் புத்தியை நாம் பரிகசிக்கவில்லை. கண்டிக்கவுமில்லை. அது அவருடைய சொந்தக் கருத்து.

ஆனால் அவற்றில் அவர் என்னவோ பெரிய தத்துவங்களைக் கண்டுவிட்டதாக அவிழ்க்கின்றாரே ஆசிரம மூட்டையை அதைத்தான் கண்டிக்கின்றோம்.

இன்று நாட்டிலுள்ள மக்கள் அத்துணைப் பேருக்கும் புராண தத்துவங்கள் தெரியாது. மக்களுக்கு அவை அறிவிக்கப்படவுமில்லை. அறிவிக்கப்பட்டாலும் முதலில் ஆபாசக் கதை எழுதுவானேன் அதற்கொரு தத்துவம் கூறுவானேன் என்று பொதுமக்கள் கேட்பர். எனவே, அரசியல் கருவியாக ஏமாந்தவர்களை ஏமாற்றுவதற்காக மிகச்சிலர் தம்முடைய மேனாட்டுக் கல்வியறிவைக் கொண்டு வலிந்து பொருள் கூறுவதைத் தவிர்த்து, இவற்றால் பொதுமக்கள் நலனடைய முடியாது. வேண்டுமானால் மேடம் பிளாவட்ஸ்கிக்கு இந்தப் புராணங்களில் தத்துவங்கள் காணப்படலாம். சுத்தானந்தருக்குத் தத்துவங்கள் தோன்றலாம்! ஆனால் மக்களுக்குத் தெரியாதே இவர்கள் நினைக்கும் தத்துவங்கள் யோகம் செய்து செய்து இவர் பெற்ற அந்தச் சக்தி மக்கள் பெறவில்லையே

போகட்டும் 'வேதங்கள்புராணங்கள் எல்லாம் பொய் என்று திராவிடர் கழகத்தார் கூறுவதால் இன்னும் கொஞ்சநாளில் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிடுவர்' என்று தோழர் சுத்தானந்தர் வயிற்றெரிச்சல் தாங்க முடியாமல் சாபம் கொடுக்கிறார்.

ஆனால் பாபம் சுத்தானந்தருக்கு என்ன தெரியும். இந்த நாட்டிலே இதுகாறும் இவற்றினைக் குப்பைகள் என்று யார் யார் இகழ்ந்துள்ளனர் என்று சற்று மகான் இராமலிங்க அடிகளாரின் திரு அருட்பாவைப் புரட்டிப் பார்த்தால் இந்த வேதங்களும் புராணங்களும் அவருடைய திருவருட்பாக்களில் படும்பாடு நன்கு விளங்கும் தமிழ்நாட்டிலே மகான் இராமலிங்க அடிகள் மட்டுமின்றி, மற்றைய அறிஞர்பெருமக்களும் அந்தக் காலத்திலேயே இந்தப் புராணங்களைக் குப்பைகளெனக் கூறியிருக்கின்றனர். பேராசிரியர் திரு. வி. க. அவர்களும் புராணங்கள் மக்களுக்குகந்தவையல்ல வென்பதைத் தெளிவுபட எடுத்துக் காட்டியுள்ளார்.

எனவே, இராமலிங்க அடிகள் தாயுமான அடிகள். சிவவாக்கியர், திருமூலர், கபிலர் போன்ற தமிழப் பேரறிஞர்களும் மகான்களும் காண முடியாத தத்துவங்களை இந்த 20 ஆம் நூற்றாண்டு யோகி கண்டுபிடித்துவிட்டார் போலும்.

இப்படியெல்லாம் தமிழ் மொழி

(3ம் பக்கம் பார்க்க)

Phone: No. 4502 Regd: No. M. 5458

விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 30—12—50 | மணி 28

கல்லூரிப் படிப்புக்குச் சர்க்கார் பண உதவி

(:0:)

தற்குறிகளும், வேலையில்லா திண்டாட்டமும் கிடையாது

:0:

பள்ளிப் படிப்பு முடியும் வரை கட்டாய இலவச போதனை

(:0:)

இங்கல்ல — நியூஜிலாந்தில்!

சென்னை, டிச. 29—

"நியூஜிலாந்தில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களும் கிடையாது, வேலையில்லாத் திண்டாட்டமும் கிடையாது. பள்ளிக்கூடப் படிப்பு முடியும்வரை ஒவ்வொருவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது" என்று நியூஜிலாந்தின் முன்னாள் கல்வி அமைச்சர் தோழர் எச். ஜி. ஆர். மேஸன் கூறினார்.

சர்வகலாசாலை படிப்பும் இலவசம்

அவர் மேலும் கூறியதாவது: இந்தியாவிலுள்ளதுபோல் எல்லாரும் நியூஜிலாந்தில் சர்வகலாசாலைப் படிப்பை நாடுவதில்லை. படிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் மட்டுமே சர்வகலாசாலைக்கு வருகிறார்கள். பள்ளிக்கூட தலைமை ஆசிரியர்கள், மேல் படிப்புக்குத் தகுதியானவர்கள் என்று சிபார்சு செய்யும் மாணவர்களுக்கான கலாசாலைக் கட்டணங்களைச் சர்க்காரே கொடுக்கிறது.

இம்மாதிரி சிபார்சு கிடைக்காதவர்கள் கலாசாலைப் படிப்புப் பெற விரும்பினால் அவர்கள் தங்கள் சொந்தச் செலவில் படிக்கலாம்.

பள்ளிகள் பெரும்பாலும் 'டெக்னிகல்' ஸ்தாபனங்களே

பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் டெக்னிகல் கல்வி போதிப்பவைகளே. இந்தத் தொழில் நுணுக்கத் துறைகளில் சிறுவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றன. பெண்களுக்குச் சமையலும், வீட்டு விஞ்ஞானங்களும் கற்றுத்தரப்படுகின்றன. நியூஜிலாந்திலுள்ள எல்லாப் பள்ளிகளிலுமே இதற்கான சாதனங்கள் இருக்கின்றன. எல்லாக் குழந்தைகளும் கட்டாயம் கல்வி கற்றாக வேண்டும் இதற்காகக் காசுபணம் செலவில்லை.

ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு கலாசாலை

நியூஜிலாந்திலுள்ள கலாசாலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரிவைச் சொல்லித்தருவதில் நாட்டம் செலுத்துகின்றன. எஞ்சினியர், மருத்துவம், சிற்பம், சித்திரம் இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி கலாசாலை இருக்கின்றன. நியூஜிலாந்து கல்விக்காக மட்டும் ஆண்டுக்கு ஒரு கோடி பிரிட்டிஷ் பவுனுக்குமேல் செலவிடுகிறது.

நியூஜிலாந்தில் இன்று சுமார் 2000000 மக்கள் தொகை இருக்கிறது. 1935ல் தொழிற் கட்சி சர்க்கார் ஏற்பட்டதிலிருந்தே சென்ற 15 ஆண்டுகளாக கைத்தொழிலில் முன்னேறிவந்திருக்கிறோம். வயதானவர்கள் வேலை செய்ய உடல் திறனில்லாதவர்கள் இவர்களுக்குச் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் இருக்கின்றன.

புல் விஷயமாக ஆராய்ச்சி

கால் நடைகளுக்கு முக்ய ஜீவனமான புல் விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. ஆராய்ச்சி செய்து பல ரகப் புல்களை வளர்க்க விஞ்ஞான ரீதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

சர்க்காருக்கும், உணவுப்பொருள் பயிர் செய்பவர்களுக்குமிடையே பரிபூரண ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இருப்பதால் உணவு விநியோகம் நன்கு நடைபெற்று எல்லாருக்கும் உணவு கிடைக்கிறது.

மாலைமணி

சென்னை 30—12—50 சனிக்கிழமை

எழுத்தறிவைக்குப் :: :: பத்தாண்டுகள்

கட்டாயக் கல்வித் திட்டம் சட்ட புத்தகத்தில் அழகுபட எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று புதிய அரசியல் திட்டத்தில் கல்வி அறிவின்மையைப் போக்க வேண்டுமென்று கண்டிருக்கிறது. இவை அழகாக ஏட்டுச் சுவடிகளில் இருக்கின்றனவே ஒழிய இன்றளவும் நடை முறையில் வரவில்லை.

பள்ளிக்கூடம் சென்று பயிலும் வயதுடைய குழந்தைகளுக்குக் கல்வியறிவு தர வசதியே செய்யப்படவில்லை. கோயமுத்தூரில் 64 சத விகிதம் பள்ளிப் பருவப் பிள்ளைகள் பள்ளி சென்று கல்வி பெற வசதியற்றிருக்கின்றனர். மதுரை ஜில்லாவில் 76 சத விகிதம பிள்ளைகள் இவ்வாறு கல்வி கற்பதற்குரிய வசதியில்லாமல் இருக்கின்றனர். வட ஆர்க்காட்டில் 75 சத விகிதத்தினருக்குக் கல்வியறிவில்லை, இவற்றைவிட ஆந்திர நாட்டு நிலை மிகவும் கேவலமாயிருக்கிறது.

இந்த நிலையில் 10 ஆண்டுகளுக்குள் கல்வி அறிவின்மையை இந்நாட்டினின்றும் போக்கிவிடுவதற்கேற்ற வகையில் கட்டாயக் கல்வித் திட்டம் அமுல் நடத்தப்பட வேண்டும என்று இந்திய அரசியல் திட்டத்தில் கூறப்பட்டிருப்பதால் சென்னை அரசாங்கம் அத்துறையில் இறங்கப் போவதாகக் கல்வி மந்திரி அறிவித்துள்ளார்.

அதாவது ஆண்டு ஒன்றுக்கு ஒன்றரைகோடி ரூபாய் செலவில் 5 லட்சம் பேருக்குக் கல்வியளிக்கச் சென்னை அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. 5 லட்சம் பேர்கள் கல்விப் பயிற்சியளிக்கப்பட்டால் அவர்கள் தவிர இன்னும் 27 லட்சம் குழந்தைகள் பள்ளி செல்லும் வயதினராகக் கல்விக்குக் காத்திருக்க வேண்டியவராயுள்ளனர்.

உண்மையிலேயே அரசாங்கத்தாரின் கல்வித் திட்டம் சரியானபடி நிறைவேற வேண்டுமாயின், எல்லாக் குழந்தைகளுக்கும் உடனடியாகக் கல்விப் பயிற்சியளிக்க ஏறபாடு செய்தல் வேண்டும்.

ஆனால் இதற்காகும் செலவை அரசாங்கம் ஏற்க முடியுமா? என்று ஐயுறுவதாகக் கல்வியமைச்சர் கூறுகிறார். இதற்குக் காரணம் அரசாங்கத்தில் போதிய பணமில்லை யென்பதேயாகும்.

ஆனால் வீண் செலவுகளை அரசாங்கம் நிறுத்தினால் நாட்டு முன்னேற்றத்திற்கான கல்வி முதலியவற்றை நன்கு நிறைவேற்றிவிடலாம்.

சான்றாக, சட்டசபை அங்கத்தினருக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தை நிறுத்திவிடலாம். ஏனெனில் அவர்கள் தேச பக்த தியாகிகள். அமைச்சர்கள் சம்பளமில்லாமல் வேலை செய்யலாம். பிர்க்கா அபிவிருத்தி இலாக்கா போன்ற வீண் இலாக்கக்களை எடுத்தே விடலாம். இவ்வாறெல்லாம் உள்ள இன்னும் பல இனங்களைக் குறைத்து அப்பணத்தைக் கல்விக்குப் பயன்படுத்தலாம். ஆனால் மந்திரிகளுக்கும், மற்றைச் சட்டசபை உறுப்பினர்களுக்கும் இந்தத் தியாக புத்திவருமா!

தென்னப்பிரிக்காவில் மக்கள் தொகை அதிகரிப்பு

பிரிடோரியா, டிச. 29—

தென்னப்பிரிக்காவில் அடுத்த மே மாதத்தில் மக்கட்டொகை கணக்கெடுக்கப்படும்போது மக்கட்டொகை 1946 ல் இருந்ததைவிட 1100000 அதிகமாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜோஹென்னஸ் பர்க்கில் மட்டும் 1946ல், 765457 பேர் இருந்தனர் வரும் மே மாதத்தில் இத்தொகை பத்து லட்சத்தை எட்டிப் பிடித்துவிடும் எனத் தெரிகிறது.

தென்னப்பிரிக்காவில் தமிழ் வகுப்பு

மாரிட்ஸ் பர்க், டிச. 29—

தென்னப்பிரிக்காவில் சென்ற 40 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் இலவச தமிழ் வகுப்பு நிதிக்காக ஹிந்து யுவர் சங்கம் ஒரு பொருட் காட்சியை நடத்தியது.

அருப்புக்கோட்டை நெசவாளர்கள்

—(o)—

நேரடி நடவடிக்கையில் இறங்குவர்

—(o)—

பொதுக் கூட்டத் தீர்மானம்

அருப்புக்கோட்டை, டிச. 25—

இன்று புளியம்பட்டி சாலியார் பாவடித் தோப்பில் இரவு 7 மணிக்கு தோழர் சு. காளிமுத்து அவர்கள் தலைமையில் மாபெரும் நெசவாளர் பொதுக்கூட்டம் கூடியது. சுமார் 25,000 மக்கள் (தாய்மார்கள் உட்பட) கூடியிருந்தனர் தோழர்கள் ச. இராமசாமி ஆ. முத்துசாமி, சோ. முத்துராமலிங்கசேது, எஸ். மாணிக்க வாசகர், எம். கே. ஆறுமுகம், முனிசிபல் கௌன்சிலர் தாவூத்கான், சு. நடராசன், சிவசண்முகசுந்தரம், எம். எஸ். இராமசாமி ஆகியோர்கள் நெசவாளர் விஷயத்தில் சர்க்காரின் மிதமான போக்கைப் பற்றியும், நேரடி நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் விரிவாகப் பேசினர். பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் 25,000 மக்களின் கைத்தட்டலுக்கிடையே ஏகமனதாக நிறைவேறியது.

பின்னர் நூற்றுக் கணக்கான வாலிபர்கள், தாய், தந்தை, தமிழ் ஆகியவற்றின்மேல் ஆணையிட்டு, "நெசவாளர்களின் நேரடி நடவடிக்கைப் போரில் உடல், பொருள், ஆவிமூன்றையும் பணயம் வைப்போம்" என்று சூளுரைத்த காட்சி கோழைகளையும் வீரராக்கத் தக்கதாக இருந்தது. தீர்மானம்:—1951-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 15-ம் நாள் சென்னை மாகாணத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் போதுமான நூல் கிடைக்கச் செய்யவில்லையானல், 16-1-51 முதல் மத்திய சர்க்கார் மீது நேரடி நடவடிக்கை எடுத்துக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

நெசவாளர்களுக்கு நூலைக் கொடுத்துவிட்டு அதே நேரத்தில் சூழ்ச்சியாக ஜவுளி ஏற்றுமதியைத் தடைசெய்து, ஜவுளி விற்பனையாகாத காரணத்தினால் நூல்விற்பனைச் யாகாமலிருக்கச் செய்து, மீண்டும் நூல் ஏற்றுமதி செய்யும்படி அனுமதிக்கும் வஞ்சகச் செயல், கடந்த ஆண்டுகளில் நடைபெற்றிருப்பதால் இனிமேல் ஜவுளி ஏற்றுமதியைத் தாராளமாக அனுமதித்து நூல் ஏற்றுமதியை அடியோடு தடுக்க வேண்டுமென்று சர்க்காருக்கு வேண்டுகோள்போன்ற எச்சரிக்கைச் செய்கிறது.

கொள்ளையடியுங்கள்

உணவுவிடுதி முதலாளிகளுக்கு சென்னை சர்க்கார்

சென்னை, டிச. 28—

பி. வகுப்பு சாப்பாட்டுக் கட்டணத்தை 8 அணாவிலிருந்து 10 அணாவாக உயர்த்தும்படிக் கேட்டிருந்த உணவு விடுதி முதலாளிகளுக்குஉத்தரவும் கிடைத்துவிட்டதாம். ஓட்டல்களில் சாப்பிடுபவர்கள் பெரும்பாலும் நடுத்தர குடும்பத்தார்தான். இன்றுள்ள நிலையில் நடுத்தர குடும்பத்தார்நெருப்பை மிதித்த காலைப் போன்றுத் தத்தளிக்கின்றனர். உணவு விடுதிகளில் இன்று சர்க்கார் அளவுப்படி ஒருவரும் உணவு கொடுப்பதில்லை. அதற்குப் பதில் கோதுமையையாவது நல்ல முறையில் சமைத்து தருகிறார்களா? என்றால் அதுவும் இல்லை. பெரும்பாலான உணவு விடுதிகளில் கோதுமையைத் தண்ணீரில் கொட்டி கொதிக்க வைத்து மாட்டுக்கு வைப்பதைப் போன்று வைக்கிறார்கள். இதனால் கோதுமை இல்லாமலே அதிகக் கட்டணத்தைக் கொடுத்துக் கால் வயிறு உணவு உண்டு செல்லுகிறார்கள். உணவு விடுதி முதலாளிகள் அந்தக் கோதுமையைக் காலை சிற்றுண்டிக்குப் பூரி செய்து விற்றுக் கொள்ளையடிக்கிறார்கள். ஆனால் உணவு விடுதி முதலாளிகள் கட்டண உயர்வுக்குக் கூறும் காரணம், "6 அவுன்ஸ் அரிசி போக 6 அவுன்ஸ் கோதுமையைப் பூரி, சப்பாத்தியாகச் செய்து போடவேண்டியிருப்பதால் அதிக ஆட்கள் தேவை. அதற்கு இப்பொழுதுள்ள குறைந்த கட்டணம் கட்டாது. இதை 8 அணாவிலிருந்து 10 அணாவாக உயர்த்த வேண்டும்" என சர்க்காரைக் கேட்டனர். (பெரும்பாலான விடுதிகளில் பூரியோ, சப்பாத்தியோ போடுவதில்லை) சர்க்கார் அவர்கள் சொல்லுவதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதைச் சிறிதாவது சிந்தித்துச், சோதனை செய்து முடிவு செய்தார்களா? அவர்களுக்கென்ன? உத்தரவு ஆனால் அதனால் பாதிக்கப்படுபவர் நடுத்தர குடும்பத்தார்தானே? இதிலிருந்து இப்போதுள்ள சர்க்கார் மக்கள் அன்றாட வாழ்க்கை நிலையைப்பற்றிச் சிறிதும் சிந்திப்பது இல்லை என்பது நன்குவிளங்குகிறது, ஆனால், இந்த சர்க்காரை தாம்பூலம் வைத்து வரவேற்றதில் குறிப்பிடத்தக்க பங்கு கொண்டவர்கள் இந்த நடுத்தர குடும்பத்தார் என்றால் மிகையாகாது. அதே போது இன்று அல்லலுறுவதும் இவர்கள்தான். பொருங்கள் இன்னும் எவையெவை உயர்த்தப்பட வேண்டுமோ! ஆனால் இதற்கெல்லாம் 'ஆண்டவன் அருள்' என்று மட்டும் கூறமாட்டார்கள் என்பது தெரியும் !!

மதுரையில் ஆசைத்தம்பிக்கு வரவேற்பு

———(0)———

அரைமைல் நீள அணிவகுப்பு
ஆறுமைல் நீள ஊர்வலம்

மாபெரும் பொதுக்கூட்டம்

மதுரை, டிச. 24—

24—12—50 மாலை 5-மணிக்கு விருதைத் தோழர் ஏ,வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் விருதுநகரிலிருந்து மதுரைப் புகை வண்டி நிலையத்தில் வந்திறங்கினார்கள் தோழர் எஸ். முத்து, எம். அய்யாசாமி இருவரும் அவருக்கு மலர் மாலையிட்டு வாவேற்று வெற்று வெளியில் அழைத்து வந்தார்கள். ரயில் நிலையத்திற்கு வெளியே கூடியிருந்த மட்டிலடங்காத மக்கள் கூட்டம் தோழர் ஆசைத்தம்பி அவர்களைக் கண்டதும், வானைப் பிளக்கும் வாழ்த்தொலிகளுடன் அவரை வரவேற்றனர் நகரின்உட்கிளைக்கழகங்கள் பலவற்றின் சார்பிலும்,தோழர் ஆசைத்தம்பிக்கு மலர்மாலைகளணிவிக்கப்பட்டது பின்னர் ஊர்வலத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரில் தோழர் ஆசைத்தம்பி அவர்கள் ஏறிக்கொண்டதும் இயக்கத் தோழர்களும் இளங்காளைகளும் அணிவகுத்து இயக்கக் கொடிகள் தாங்கி, லட்சிய ஒலி முழக்கங்களை உதிர்த்துக்கொண்டு ஊர்வலமாகப் புறப்பட்டனர். டவுன் ஹால் ரோடு, மேல்மாசி வீதி, தெற்குமாசி வீதி, கீழ்மாசி வீதி, வடக்குமாசி வீதி, புது ஜெயில் ரோடு, அழகரடி, ராஜேந்திரர் தெரு, கிருஷ்ண பாளையம் வழியாக, அரை மைல் நீள அணிவகுப்பு ஊர்வலம் ஆறு மைல் தூரம் சுற்றிப் புட்டுத் தோப்பு மைதானத்தை அடைந்தது. ரோடுகளின் இருமருங்கிலும் ஆண்களும் பெண்களும் லட்சக்கணக்காக ஆரம்பமுதல் கடைசிவரை கூடி நின்று ஊர்வலத்தைக் கண்டு மகிழ்ந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். ஊர்வல அணியின் முடிவில் காரில் தோழர் ஆசைத்தம்பியும் அவருடன் தோழர்கள் எஸ். முத்து, எம் அய்யாசாமி, கே. எஸ். ராஜமான் ஆகியோரும் அமர்ந்திருந்தார்கள். தோழர்கள் பி. கே. சேதுராமன், கலைத்தூதன், ஆ. சுப்பையா, சிவஞானம் ஆகியோர் ஊர்வலத்தை ஒழுங்குபடுத்தி நடத்திச் சென்றார்கள்.

பொதுக்கூட்டம்

பின்னர் புட்டுத்தோப்பு மைதானத்தில் சரியாக 7 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகியது. நாறபுறமும் சூழ்ந்திருந்த மக்கள் வெள்ளத்தின் மத்தியில உயர்ந்தமேடைமீதிருந்து கிளம்பிய சொற்போர் முழக்கம் மக்களின் உள்ளத்தைத் தொடுவதாக இருந்தது என்பதைக் கூட்ட ஆரம்பமுதல் கடைசிவரை மக்கள் காட்டிய ஆர்வமும் உணர்ச்சியும் நிறைந்த, கைதட்டுதல்-கண்டனக் குரல்கள் எடுத்துக்காட்டியது. கூட்டத்திற்கு சுமார் ஐம்பதினாயிரம் பேர்வரை கூடியிருந்து ஆளவந்தாரின் தவறான நடத்தைகளைப் பேச்சாளர்கள் எடுத்துக் கூறும்போது காட்டிய அளவற்ற வெறுப்பும், சிரிப்பும் மாற்றுக் கட்சியினரை மருளச்செய்தது. கூட்டத்திற்கு நகர்க்கிளையின் செயலாளர், எம். அய்யாசாமி தலைமைவகித்தார். தோழர்கள் கே, எஸ். ராஜமான், எஸ். முத்து ஆகியோர் பேசிய உணர்ச்சிகரமான பேச்சுக்குப்பின் பலத்த கைதட்டுதலுக்கிடையே தோழர் ஆசைத்தம்பி அவர்கள் பேச எழுந்தார். வேலாயுதம் நினைவுப் படிப்பகம், வடக்கு மாசிவீதி மறுமலர்ச்சி மன்றம், வடக்குமாசி வீதி தமிழ்ப் பொழில் மன்றம், தெற்குவாசல் தாலமுத்து நடராசன் நினைவுப் படிப்பகம், சுப்பிரமணியபுரம் பகுத்தறிவு வாசகசாலை மத்தியவட்டம், தி. மு. கழகம் சந்தைப்பேட்டை, அண்ணாத்துரை வாசகசாலை, மாகாளிபட்டி தி. மு. இளைஞர் மன்றம், பொன்னகரம் ஜோதி வாசகசாலை, அனுப்பானடி பாரதிதாசன் படிப்பகம், கீழ்மாசி வீதி, திராவிட மறுமலர்ச்சிமன்றம், மேற்கு வட்டம் தி. மு. கழகம் மற்றும் பல கிளைக் கழகங்களின் சார்பில் தோழர் ஆசைத்தம்பி அவர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டது. பின்னர் தோழர் ஆசைத்தம்பி அவர்கள் மக்கள் மனதில் பதியுமாறு உணர்ச்சியும் கிண்டலும் கலந்து பேசிய சொற்பெருக்கு மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும், புத்துணர்ச்சியையும் உண்டாக்கியது. நாட்டின் வறுமை நிலை. வாட்டிவதைக்கும் பசிக்கொடுமை, வடநாட்டின் சுரண்டல் தன்மை, ஆகியவற்றை விளக்கியும், ஆட்சியாளர் சிறையில் தம் தலையை மொட்டையடித்ததோடு நம்மிடம் சிறை அதிகாரிகள் நடந்துகொண்ட விஷமத்தனமான போக்கையும் வெட்ட வெளிச்சமாக எடுத்துக் கூறியது மக்களின் மனதை உருக்குவதாக இருந்தது. அவர் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றியபின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது. இப்பொதுக் கூட்டமும் ஊர்வலமும் அழகரடி வேலாயுதம் நினைவுப் படிப்பகத்தின் சார்பில நடத்தப்பட்டது.

"அழகிரி நினைவு மாளிகை"

21-12-50 வியாழன் பிற்பகல் 1-மணிக்கு திருவாரூர் விசயபுரம் கருணாநிதி அச்சக மேல்மாடியில் தோழர் கருணை, எம். ஜமால் அவர்கள் தலைமையில் மேற்படி செயற்குழு அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுகாலை கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைவர் மு. கருணாநிதி:-செயலாளர்கள், சே. பெ. சேதுபதி, டாக்டர் இரா. விசயராகவன், பொருள் காப்பாளர் கருணை, எம். ஜமால், விளம்பர உறுப்பினர்கள் இராம அரங்கண்ணல், ஏ. ஜுபீல், கு. தென்னன், சி டி. மூர்த்தி, உறுப்பினர்கள்-புலவர் குழந்தையா, ரா. சிவசுப்ரமணியம், எஸ். வீரையா, எம். மொய்தீன், மொய்தீன் பிச்சை, ஆர் ஆர். கிருஷ்ணன், காசிம், பி. வி. லிங்கம். மணவை. சிவம், ஏ. எஸ். பாண்டியன், க. நாகப்பன், ப. சிங்காரம், சு. இராமநாதன்.

அழகிரிநினைவுமாளிகைக்கட்டிட நிதிக்காக முதல் உதவியாக கலைவாணர், என் எஸ். கிருஷ்ணன் அவர்கள் கலை நிகழ்ச்சி ஒன்று நடத்தித்தர ஒத்துக்கொண்டமைக்கு இக் குழு பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

கலா நிகழ்ச்சி நிகழ்த்த திருவாரூர் பேபி டாக்கிசைத் தருவதாக வாக்களித்த தஞ்சை தோழர் ஒய். ஏ. ஆரோக்கியசாமி அவர்களை இக் குழு பாராட்டுகிறது.

மேற்படி கலா நிகழ்ச்சியை 1951 ஜனவரி ஏழாம் நாள் மாலை 6 மணிக்கு நடத்துவதெனதீர்மானிக்கப்பட்டு செயலாளர் செ. மே. சேதுபதி அவர்களால் நன்றிகூறப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

புராணங்களை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போர்வையிலே புகுந்துகொண்டு அவரவர்களுக்கு ஏற்றாற் போல் இச்சகம் பேசித் திரிந்துகொண்டிருக்கும் காவிப் பேர்வழிகள் இன்று திராவிட இயக்கத்தில் வந்து மோதிக்கொள்வானேன்! அவர்கள் நினைப்பதை அவர்கள் சொல்லிக்கொண்டு போகலாமே! உதவாக்கரை கருத்தை மக்கள் மீது திணித்து, அவர்களை ஏமாற்றும் தறையில் திராவிட இயக்கத்தைத் திட்டிக்கொண்டு இறங்குவானேன்?

ஆனால் பொதுமக்கள் சுத்தானந்த பாரதியின் பேச்சைக் கண்டு மயங்கிவிடும் நிலையில் இல்லை. அவர் எவ்வெப்போது எப்படியெப்படிப் பேசியும் எழுதியுமிருக்கிறார் என்பதை நன்கு அறிவார்கள். இப்போது அவர் கூறியிருப்பதும் திராவிடர் மீது காய்ந்து விழுவதும் இந்தச் சந்தர்ப்பத்துக்குள்ள பேச்சு என்பதைப் பொதுமக்கள் அறிவர்.

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

1—1—51

திருநெல்வேலி

சி. என். அண்ணாதுரை

4—1—51

திண்டுக்கல்

சி. என். அண்ணாதுரை

வரிவருமானம் பெருகுகிறது

........(௦)........

ஆனால் கல்வியளிக்கப் பணமில்லை

........(0)........

சென்னை அரசாங்கத்தின் நிலை

சென்னை, டிச. 28—

சென்னை அரசாங்கத்தாரின் விற்பனை வரி இனத்தில் மட்டும் கடந்த 8 மாத காலத்தில் ரூ. 50 லட்சம் அதிகமாக வசூலாகியிருக்கிறது. வர்த்தக வரிகளில் கடந்த ஆண்டுகளைவிட இவ்வாண்டு ஒருகோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கும்.

இவ்வாறு நாளுக்குநாள் அரசாங்கத்தின் வரியினங்கள் பெருவாரியான தொகையைக் கொடுத்து வந்தும் துவக்கக் கல்வியை அரசாங்கமே ஏற்று நடத்துவது இப்போதுள்ள சூழ்நிலையில் முடியாத காரியம் என்று கல்வியமைச்சர் மாதவமேனன் கூறுகிறார்.

நம் அரசாங்கத்திற்கு எவ்வளவு பணம் வந்தாலும் போதவில்லை என்று கூறுவதற்கோ, ஏதாவது ஓர் இலாக்காவை ஏற்று நடத்தக் கோரினால் அது முடியாதெனக் கூறுவதற்கோ அச்சம் தோன்றுவதில்லை.

அப்படியே எடுத்து நடத்தினாலும், அதில் ஊழலும் குழப்பமும் ஏற்பட்டுக் குழறுபடி பெருகிவிடுகின்றது. இவற்றிற்குக் காரணம் என்ன? நிர்வாகத்திறன் இன்மையே என்று பொதுமக்கள் கூறினால் இதில் தவறு என்ன?

ஆப்பிரிக்க மாணவர்களுக்குத் தடை

தென்னாப்பிரிக்காவுக்குள் ஆப்பிரிக்க மாணவர்கள் வந்து படிப்பதைத் தடை செய்து மலான் சர்க்கார் பிறப்பித்துள்ள உத்திரவைக் கண்டிக்க ரொடீஷியா பிரிஸ்பிடீரியன் சர்ச் முடிவு செய்திருக்கிறது.

சர்க்கார் இவ்விஷயத்தைப்புனராலோசனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தென்னாப்பிக்க சர்க்கார் கல்வி மந்திரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

ரொடீஷியாவில் ஆப்பிரிக்கமாணவர்கள் படிக்க சர்வகலாசாலை ஒன்று ஏற்படுத்தும் முயற்சியை இந்த சர்ச் வரவேற்கிறது.

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

உடையாப்பட்டி

அதிகாரப்பட்டி கீழ்ப்புர மைதானத்தில் தோழர் ஸ்டாலின் கே. இராமசாமி அவர்கள் தலைமையில் சொற்பொழிவுக்கூட்டம் ஆரம்பமாகியது. கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் தோழர்கள் சுப்பையா, இராமையா, ஆறுமுகம் ஆகிய தோழர்கள் திராவிடநாட்டுப்பண் பாடினார்கள். கூட்டத்திற்கு சுமார் 400 பேர்கள் வந்திருந்து கூட்ட நடவடிக்கைகளை ஆவலுடன் கேட்டனர். நூற்றுக்கதிகமான பெண்களும் கூட்டத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. "திராவிட இயக்கமும், பொதுமக்களும்" என்னும் பொருள் பற்றி தோழர்கள் டி. என். இராமலிங்கம், எ. சுப்ரமண்யம், எஸ். எ. ரகீம், எம். இராசரத்னம் ஆகியவர்கள் கிராமீய நடையில் அழகாகவும், தெளிவாகவும் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் விளம்பர உறுப்பினர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

அரியநாயகபுரம்

இவ்வூர் தி. மு. க. சார்பில் 22-12-50 ல் தோழர் குமரபெருமாள் தலைமையில் அ. மாரியப்பன் கைத்தறி நெசவாளரின் அவல நிலையைப் பற்றியும், அ. தங்கச்சாமி சுயமரியாதையின் அடிப்படைக் கொள்கையைப் பற்றியும், போ. ராமசாமி சென்னை சர்க்காரின் ஆட்சிப் போக்கைக் கண்டித்துப் பேசியதும், வி. உ. அ. மாரியப்பன் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

கோடங்கிபட்டி

20-12-50-ல் தி. மு. க. பொதுக் கூட்டம் ஆசிரியர் இரா. கிருட்டினன் தலைமையில் நடைபெற்றது. உடுமலை நகர சபைத் தலைவர் எம். எஸ். கனகராசன், தங்கவேலு, பொள்ளாச்சி ப. என். இராமாநுசன் இவர்கள் கழகக் கொள்கைகளைப் பற்றியும், சமூக மூடப் பழக்க வழக்கங்களைப் பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

மாப்பிள்ளைக்கண்டபுதூர்

21-12-50-ல் பி. நடராசு தலைமையில் தி. மு. கழக பொதுக் கூட்டம் நடைபெற்றது. கடவுளின் நம்பிக்கையில் மோசம் போகும் நிலையைப் பற்றி விரிவாக ஈரோடு எஸ். அப்பாவு, பொள்ளாச்சி பி. என். இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

திருமங்கலம் (மதுரை மாவட்டம்)

20-12-50 ல் நடந்த தி. மு. க. செயற்குழு, செயலாளர் க. ம. வ. நடராசன்; துணைச் செயலாளர் இராசமன்னார்; பொருளாளர் மு. ராமசாமி; விளம்பர உறுப்பினர் அப்துல் மஜீத் இவர்களை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

இரங்கற் கூட்டம்

24-12-50 இரவு 7 மணிக்கு பாஞ்சாலி மைதானத்தில் சர்வ கட்சியின் சார்பாக திருவத்தூர் சி. என். சுப்ரமணியம் நாயுடு மறைவுக்காக அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. அதற்கு திருமகள் மோட்டார்-சைகல் ஒர்க்ஸ் டி. எம். பொன்னுசாமி அவர்கள் தலைமை வகித்தார். தலைமை உரைக்குப் பின்னர் உயர்நிலைப்பள்ளி தமிழ்ப் பண்டிதர் வா சி. சுப்ரமணியம் அவர்கள் சிறிது நேரம் பேசியபின் தான் இயற்றிய ஒரு இரங்கற்பாவை வாசித்துக் காட்டினார். பின்னர் கே. எ. காளியப்ப முதலியார் அவர்கள் நாயுடு அவர்களின் பொதுநலச் சேவையைக் குறித்து விரிவாகப் பேசினார். மற்றும் அவர் பேசுகையில் ஓர் நிதிக்குழு ஒன்றை அமைத்து நாயுடு அவர்களின் குடும்பத்திற்கு ஒரு பெருந்தொகை வசூல் செய்து தரவேண்டும் என்றும் கூறினார். அதற்குப் பின்னர், நாயுடு அவர்களின் சமூகத்தொண்டு குறித்தும், பிறர் நலன் பேணும் தன்மையைக் குறித்தும் தோழர்கள் டாக்டர் மூசாகான், ரங்கசாமி செட்டியார், 'வெல்கம் காபிகிளப்' உரிமையாளர் பிரசாத், எம். எஸ். அப்துல் அஜீஸ்சாயபு, கிருஷ்ணமாச்சாரி, சர்க்கார் வழக்கறிஞர் வித்வான் பி. பெரியசாமிபிள்ளை, உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சின்னதம்பி நாயனார், அப்துல் மாலிக் சாயபு ஆகியவர்கள் பேசிய பிறகு தமிழரசுக் கழக சார்பாக கே. எம். சீனிவாசன் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகம் திருவண்ணாமலை பஸ் தொழிலாளர் சங்கம், திருப்பத்தூர் பீடி தொழிலாளர் சங்கம், தாழ்த்தப்பட்டோர் சமூகம் ஆகியவைகள் அனுதாபம் தெரிவித்துக் கொண்டன. கடைசியாக தோழர் அனுமந்தராசு அவர்கள் நன்றி கூறியதும் கூட்டம் இரவு 8-30 மணிக்குக் கலைந்தது.

* * *

பெரியகுளம்: சமூக உரிமை நீதி மாநாட்டு வரவேற்புக் கழகம் 25-12-50-ல் கூடி திருப்பத்தூர் சேர்மன் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் இயற்கை எய்தியமைக்காக இரங்கற் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் அன்னவர் குடும்பத்திற்கு அனுப்பப்பட்டது.

28-1-51-ல் நடைபெறும் சமூக உரிமை நீதி மாநாட்டில் தமிழிசை நாடகக் குழுவினரால் 'வானவில்' என்ற நாடகம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

* * *

23-12-50 ல் திருப்பத்தூர் சி. என். சுப்பிரமணிய நாயுடு அவர்களுக்கு 24-12-50 பொம்மே குப்பம் தி.மு.க. சார்பாக மௌன ஊர்வலமும், அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

லண்டன், டிச. 29—

விமானியே இல்லாமல் பறந்து சென்று திரும்பிவரக்கூடிய விமான மொன்றை ஆஸ்திரேலியா தயாரித்திருக்கிறது.

இந்த விமானத்திற்கு மிகச்சிறிய ஜெட் இயந்திரம் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

இனி நடப்பவை

கீழப்பளுவூர்:—2-1-51 செவ்வாயன்று இரவு 7-30 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது இரா. நெடுஞ்செழியன் கலந்துகொள்வார்கள்.

* * *

சென்னை (குயப்பேட்டை):— 20/1 ராமாஞ்சலு கார்டன் தெரு, சென்னை 12-ல், 31-12-50 ஞாயிறு அன்று காலை 10 மணிக்கு தி. மு க. பொதுக் குழுவினர் (General-Body) கூட்டம் ஒன்று கூட்டப்படும். எல்லா அங்கத்தினர்களும் இதனையே அழைப்பாகக் கொண்டு கூட்டத்திற்கு தவறாமல் வரும்படி பாலசுப்பிரமணியன் கேட்டுக் கொள்ளுகிறார்.

திருக்குறள் மாநாடு

திருவண்ணாமலையில் கட்சிப்பற்றற்ற திருக்குறள் மாநாடு பெரிய அளவில் நடத்த ஏற்பாடாகிறது. அதற்காக வரவேற்புக் குழுக் கூட்டம் 7-1-51 ஞாயிறு காலை 10-மணிக்கு திருவண்ணாமலை நகராண்மைக் கழக ஆண்கள் உயர்நிலைப் பள்ளி கட்டிடத்தில் நடைபெறும். அன்பர்கள் வந்திருந்து ஆலோசனைக்கூற வேண்டுகின்றேன். வர இயலாதவர்கள் கடிதம் மூலமாய் தங்கள் ஆலோசனையைத் தெரிவிக்க வேண்டுகிறேன் என்று தோழர் ப. உ. சண்முகம் எழுதுகிறார்.

மறுமலர்ச்சி மன்றம் 3-ம் ஆண்டு நிறைவு விழா

சென்னை, சூளை. டிச. 29—

தோழர் இராம. மீனாட்சிசுந்தரம், எம். எ. அவர்கள் தலைமையில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், எஸ். எஸ். மாரிசாமி, க. தங்கவேலன் பி. ஓ. எல், (ஆனர்ஸ்) ஆகியோர், சூளை வாத்தியார் கந்தப்பிள்ளைத் தெரு, நகராண்மைக் கழகப் பாடசாலையில் 31-12-50 ஞாயிறு மாலை 5 மணிக்குப் பேசுவார்கள்.

சமூக உரிமை நீதி மாநாடு பெரியகுளம்

மாநாட்டில் காட்சிசாலை ஒன்று நிறுவப்படும். அதில் "தகுதி—திறமை"யை விளக்கும் நம்மவர்கள் ஓவியங்கள், மற்றும் புள்ளி விவரங்கள் ஆகியவை நிறுவப்படும். தோழர்கள் ஆங்காங்கேயுள்ள புள்ளி விவரங்கள் பற்றியும் எழுதக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாநாடு ஜனவரி 28ம் நாளில் பெரியகுளத்தில் நடைபெறும்.

அறிக்கை

கோவை மாவட்டத்தைச்சார்ந்த அனேக இடங்களில் இன்னும் திராவிட முன்னேற்ற மாணவர் கழகங்கள் அமைக்கப்படாமல் இருக்கின்ற இடங்களில் உடனடியாக அமைக்குமாறும், ஏற்கனவே அமைக்கப்பட்டு இருந்தால் கீழ்க் காணும் முகவரிக்குத் தெரிவிக்கும் படியும், ஜனவரி கடைசியில் மாவட்ட மாநாடு நடக்க இருப்பதால் ஆங்காங்கு மாணவர் கழகங்களை அமைத்துத் தெரிவிக்கும்படி கோவை செழியன் அவர்கள் கேட்டுக்கொள்கிறார். முகவரி: கோவை மாவட்ட தி. மு. மா. கழகம் 15-39 கோட்டை, கோவை.

ஆசிரியருக்குமுடங்கல்

நூலில்லை வேலையில்லை

ஐயா,

நாங்கள் 35 ஆண்டுகளாக நெசவுத் தொழில் செய்துவருகிறோம். எங்களிடம் ஆட்கள் வேலைசெய்கிறார்கள். இப்பொழுது நூல்சப்ளை இல்லாததால் வேலை இல்லை. வேலை இல்லாது அவர்களுக்கு எத்தனை நாட்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியும்?

சர்க்கார் நூலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யாமல், நெசவாளரின் நிலையறிந்து நெசவுக்குப் போதிய நூல் சப்ளை செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ். இ. முத்து
திருநெல்வேலி

தமிழ் இளைஞர் மன்றம்

குடந்தை துவரங்குறிச்சியில் டி. எல். ஆர். கோபால் தலைமையில் கூடி, "தமிழ் இளைஞர் மன்றம்" அமைத்தது, செயலாளர் அ. சுந்தராசலு; தலைவர் எம். வி. கிருட்டிணமூர்த்தியைத் தேர்ந்தெடுத்து துவக்க விழாவுக்கு மு. கருணாநிதியை அழைப்பதெனவும், தி. மு. க. வை ஆதரிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது.

ஸ்டாலின் அசௌக்யம்

லண்டன், டிச. 29—

மார்ஷல் ஸ்டாலின் உடல்நலக் குறைவுற்றிருப்பதாக இங்குசெய்தி கிடைத்திருக்கிறது,

ஹிருதய கோளாறும், ரத்தக் கொதிப்பும் ஏற்பட்டிருப்பதாக அச் செய்தி கூறுகிறது.

ஸ்டாலின் தன் 71-வது பிறந்த தினத்தைச் சென்ற 22ம் தேதி தான் கொண்டாடினார்.

கொள்முதல், பங்கீட்டை நிறுத்தவும்

கலெக்டர்களுக்குச் சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, டிச. 28—

பற்றுக்குறை ஜில்லாக்களில் உணவுக் கொள் முதலையும், பங்கீட்டையும் நிறுத்திவிடலாம் என கலெக்டர்களுக்கு சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரிகிறது.

சந்தா விவரம்

1. ஆண்டு ரூ. 12—8—0
6. திங்கள் ரூ. 7—0—0
3. திங்கள் ரூ. 3—8—0

தனிப்பிரதி அரையணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

"மாலைமணி" பதிப்பகம்.
மண்ணடி-சென்னை-1

Edited, Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-1